Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

விளம்பரதாரர்கள் தேவை

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

செய்தியாளர்கள் தேவை



தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை


☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 044 | வியாழக்கிழமை Thursday | 14.05.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி; ஆட்சியை தக்க வைத்தது தவெக



சென்னை: தமிழக சட்டப்பேரவையில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் முதல்வர் விஜய் தலைமையிலான தவெக அரசு வெ ற்றி பெற்றது. அரசுக்கு ஆதரவாக 144 வாக்குகளும், எதிராக 22 வாக்குகளும் பதிவாகின.5 பேர் நடுநிலை வகித் தனர்.

இந்த நம்பிக்கை வாக்கெடுப்பில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் உரையாற்றினார்கள். எதிர்க்கட்சி யான திமுக நம்பிக்கைவாக்கெடுப்பில் இருந்து வெளிநடப்பு செய்தது. இதனையடுத்து, அரசியல் கட்சிகளின் தலைவர்களின் கருத்துக்கு முதல்வர் விஜய் பதிலளித்தார்.

இதனையடுத்து, பேரவை 99 உள்விதி 5-ன் கீழ் எண்ணிக் கணிக்கும் முறையில் வாக்கெடுப்பு நடத்தப்படும் என சபாநாயகர் ஜேசிடி பிரபாகர் அறிவித்தார்.

இதனையடுத்து சட்டப்பேரவை உறுப்பினர்களை 6 பகுதிகளாக பிரித்து கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதில் ஒவ்வொரு பகுதிகளாக ஒவ்வொரு உறுப்பினரின் பெயரையும் குறிப்பிட்டு சபாநாயகர் அழைத்தார். இதில் முதலில் தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்ளப் பட்டது. அடுத்ததாக எதிர்ப்பு தெரிவிப்போர், நடுநிலை வகிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டனர். இதன் அடிப்படையில் நம்பிக்கை தீர்மானத்துக்கான வாக்குகள் எண்ணப்பட்டன.

இந்த தீர்மானத்தில் அதிமுகவில் எடப்பாடி பழனிசாமி தலைமை யிலான அணி எதிர்ப்பு தெரிவித்த நிலையில், எஸ்.பி.வேலுமணி தலைமையிலான அணி ஆதரவு தெரிவித்தது. வேலுமணி தரப்பில் ஹரி, எஸ்.காமராஜ், சி.விஜயபாஸ்கர், கே.பி.அன்பழகன், இசக்கி சுப்பையா, இரா.காமராஜ், சத்தியபாமா, லீமா ரோஸ், மரகதம் குமரவேல், சுகுமார், சேகர், திலீபன் ஜெய்சங்கர், நட்ராஜ், நத்தம் விஸ்வநாதன், க.மோகன், ரவி மனோகரன், ராகேஷ், எம்.ஆர்.விஜயபாஸ்கர், கே.சி.வீரமணி, ஜெயக்குமார், அருள்மொழித் தேவன், சி.வி. சண்முகம், பால கிருஷ்ண ரெட்டி உள்ளிட்டோர் அரசுக்கு ஆதரவு தெரிவித்தனர்.

எடப்பாடி பழனிசாமி தரப்பில் ஓ.எஸ்.மணியன், அக்ரி கிருஷ்ண மூர்த்தி, கருப்பண்ணன், இ.சி. கோவிந்தராஜன், சு.பழனிசாமி, ராமச்சந்திரன், உஷாராணி, ஜெயசுதா, சம்பத் குமார், தளவாய் சுந்தரம், நல்லதம்பி, ராஜசேகர், ராஜேந்திரன், கோ. வெங்கடாசலம், வெற்றிவேல், வேலழகன், ஜெய சங்கரன் உள்ளிட்டோர் தீர்மானத்தை எதிர்த்தனர். பாமக, பாஜக இந்த வாக்கெடுப்பில் நடுநிலை வகித்தது.

விஜய் தலைமை யிலான தவெக அரசுக்கு ஆதரவாக 144 வாக்குகளும், எதிராக 22 வாக்குகளும் பதிவாகின.5 பேர் நடுநிலை வகித் தனர். நம்பிக்கை வாக்கெடுப்பில் தவெக அரசு வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

புதிதாக ஆட்சி பொறுப்பேற்றுள்ள முதல்வர் விஜய் தலைமையிலான தவெக அரசு மீதான பெரும்பான்மையை நிரூபிப்பதற்கான வாக்கெடுப்புக்காக சட்டப்பேரவை (மே 13) காலை 9.30 மணியளவில் கூடியது.

அவை கூடியதும், தமிழக முதல்வர் விஜய், நம்பிக்கை வாக்கெடுப்பு தீர்மானத்தை முன்மொழி ந்தார். அதன் மீது வாக்கெடுப்பு நடப்பதாக சபாநாயகர் ஜேசிடி பிரபாகர் அறிவித்தார். அதன்பின்னர்,

பேரவையில் விவாதம் தொடங்கியது. தொடர்ந்து காங்கிரஸ் சட்டமன்ற குழு தலைவர் – கிள்ளியூர் எம்எல் ஏ ராஜேஷ் குமார் தவெக அரசுக்கு ஆதரவை அறிவித்தார். அவர் பேசுகையில், "தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தவெக தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தும், எந்த கட்சிக்கும் ஆட்சி யமைக்க தனிப்பெரும்பான்மை இல்லாத நிலையில், மதச்சார்பற்ற கட்சிகளிடம் மட்டுமே விஜய் ஆதரவு கோரினார். காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகள், விசிக, ஐயூஎம்எல் என்ற மதச்சார்பற்ற கட்சிகள் தவெகவுக்கு ஆதரவு வழங்கியது. பெரிய கனவுகளுடன் தமிழகத்தில் காலூன்ற விரும்பிய பாஜக ஒரிடத்தில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. இந்தச் சூழலில் நிலையான, மதச்சார்பற்ற ஆட்சி வேண்டும் என்பதற்காக தவெக அரசுக்கு காங்கிரஸ் ஆதரவு அளிக்கிறது. எங்களின் தலைவர் ராகுல் காந்தியின் வழிகாட்டுதலின்படி தவெக அரசுக்கு என்றும் உறுதுணையாக இருப்போம்," என்றார்.

விசிக எம்எல்ஏ வன்னியரசு பேசுகையில், "தவெக அரசு நம்பிக்கை வாக்கெடுப்பில் வென்று 5 ஆண்டுகள் ஆட்சியை வெற்றிகரமாக நடத்தும் என நான் நம்புகிறேன். முன்கூட்டியே அதற்கு வாழ்த்துகிறேன். பாஜகவின் செயல்திட்டமான ஆளுநர் ஆட்சியைத் தடுக்கும் வகையில் தவெகவுக்கு விசிக ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறது. தவெக அரசு தொகுதி மறுவரையறைக்கு எதிராக செயல்பட வேண்டும், தமிழகத்தில் ஆணவக் கொலைகளைத் தடுக்க தனிச் சட்டம் இயற்ற வேண்டும் என்று கோருகிறோம். மகளிர் உரிமைத் திட்டம், காலை உணவுத் திட்டம் போன்ற முந்தைய நலத்திட்டங்கள் தொடர வேண்டும்" என்றார். அமமுக சார்பில் மன்னார்குடியில் போட்டியிட்டு வென்ற எம்எல்ஏ காமராஜ் தவெக அரசுக்கு ஆதரவு தெரிவித்தார். அவர் பேசுகையில், "முதல்வர் விஜய்யை ஆளுமை மிக்கவராக தமிழக மக்கள் பார்க்கின்றனர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எம்எல்ஏ தளி ராமச்சந்திரன் பேசுகையில், "குடியரசுத் தலைவர் ஆட்சி மூலம் பாஜக கொல்லைப்புறம் வழியாக தமிழகத்தில் ஆட்சி செலுத்திவிடக் கூடாது என்பதற்காகவே தவெகவுக்கு ஆதரவு அளித்துள்ளோம். ஒன்றிய அரசு மாநில உரிமை, சமூக நீதிக்கு எதிராக செயல்படுகிறது. அதற்கு எதிராக முதல்வர் விஜய் துணிவோடு செயல்பட வேண்டும் என்று வேண்டுகிறேன்" என்றார். தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா பேசுகையில், "எதிர்க்கட்சிகளை எதிரிக்கட்சியாக நினைக்காமல் அனைவரையும் சந்தித்து ஒரு மாண்பை கடைப்பிடித்துள்ளீர்கள். அதற்கு வாழ்த்துகள். முதலில் 717 மதுக்கடைகளை மூடியது வரவேற்கத்தக்கது. அதேவேளையில், இதுவரை தமிழக அரசியல் வரலாற்றில் நடைபெறாத குதிரை பேரம் நடந்ததாக வரும் தகவல்களால் நான் மனவேதனை அடைகிறேன். ஜோதிடர் ராதன் பண்டிட்டை அரசு அதிகாரியாக நியமித்ததை தமிழக மக்கள் சார்பாக கண்டிக்கிறேன்.

இதன்மூலம் தமிழக இளைஞர்களுக்கு நீங்கள் என்ன செய்தி சொல்ல வருகிறீர்கள் என்பதை நீங்கள் (விஜய்) தெளிவுபடுத்த வேண்டும். இந்த அரசு இளைஞர்களுக்கு முன்னு தாரணமாக இருக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கிறேன்." என்றார். பாமக எம்எல்ஏ சவுமியா அன்புமணி பேசுகையில், "சமூக நீதி, ஜனநாயகம், சமத்துவம் என்பதே பாமகவின் கொள்கை. போதையில்லா தமிழ்நாடு என்பது பாமகவின் நிலைப்பாடு. பாமக கொள்கைகள் தமிழக நலனை முன்னிறுத்துவது ஆகும். தமிழகத்தில் சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடக்க வேண்டும். அதன் அடிப்படையில் அனைத்து சமூகத்தினருக்குமான விகித்தாச்சார பிரதிநித்துவத்தை ஏற்படுத்த வேண்டும். தனியார் வேலைவாய்ப்பில் 80% தமிழக இளைஞர்களுக்கு வழங்க சட்டம் இயற்ற வேண்டும் உள்ளிட்டவை பாமகவின் நோக்கங்கள். தவெக வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் பாமகவின் கொள்கை களை ஒத்துப்போகும் வாக்குறுதிகள் இருந்தன. இந்நிலையில், தமிழக முன்னேற்றத்திலும், நலனிலும் அக்கறை கொண்டு பாமக வாக்களிப்பதிலிருந்து விலகி நிற்கிறது," என்றார். பாமகவுக்கு 4 எம்எல்ஏக்கள் உள்ளனர்.

# "தூய சக்தியா... அடுத்த கட்சி எம்.எல்.ஏ.க்களை 'தூக்கும்' சக்தியா?" தவெக மீது ஸ்டாலின் கண்டனம்



சென்னை: "இது தூய சக்தியா அல்லது அடுத்த கட்சி எம்எல்ஏ-க்களைத் தூக்கும் சக்தியா என தமிழக வெற்றிக் கழகத்துக்கு வாக்களித்த மக்களே வருந்திப் பேசும் நிலை உருவாகிவிட்டது" என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் கடுமையாக சாடியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "தமிழக வெற்றிக் கழக ஆட்சி அமையவோ, தொடரவோ திராவிட முன்னேற்றக் கழகம் தடையாக இருக்காது என்ற எனது நிலைப்பாட்டு க்கேற்ப திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நம்பிக்கை வாக்கெடுப்பைப் புறக்கணித்து வெளிநடப்பு செய்திருக்கிறார்கள்.

அதேபோன்று சட்டமன்றத்தில் இருக்கும் எங்கள் தோழமை இயக்க உறுப்பினர்களான பிரேமலதா விஜயகாந்த், ஜவாஹிருல்லா, தமிமுன் அன்சாரி, நித்தியானந்தம் ஆகிய உறுப்பினர்களும் வெளிநடப்புசெய்துள்ளனர். எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியயூனியன் முஸ்லீம் லீக், விடுதலைச் சிறுத்தை கள் கட்சி ஆகிய தோழமைக் கட்சிகள், தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி வந்துவிடக் கூடாது என்ற எண்ணத்தின் அடிப்படையில நம்பிக்கை வாக்கெடுப்பில் அரசுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். அவர்களின் நிலைப்பாட்டையும் நாங்கள் மதிக்கிறோம். ஆனால், இந்த ஆட்சி அமைய வழிவகுத்த எல்லாருடைய நம்பிக்கையையும் சிதைக்கும் வேலையில தமிழக வெற்றிக் கழகம் இறங்கியிருக்கிறது. அதற்கு சாட்சி, ஆளுங்கட்சியின் 3 நாட்களின் செயல்பாடுகளும், அதற்கு எங்கள் தோழமைக் கட்சியினர் கொடுத்த அறிக்கைகளும்தான். ஆட்சி நிலைக்கத் தேவையான எண்ணிக்கைஎங்கள் தோழமை இயக்க நிலைப்பாட்டால் இருந்தாலும், இன்றைய ஆளுங்கட்சி என்ன செய்திருக்கிறது? தூய அரசியல் என்று சொல்லி ஆட்சிக்கு வந்தவர்கள், அழுக்கு அரசியல் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அதிமுக எனும் குழம்பிய குட்டையில மீன் பிடிக்க முயற்சி செய்து, அவர்களின் உறுப்பினர்களை விலைக்கு வாங்கியிருக்கிறார்கள். "உங்களோட தொடக்கமே இப்படி இருந்தா முடிவு எப்படி இருக்கும்? இது தூய சக்தியா இல்ல, அடுத்த கட்சி எம்எல்ஏ-க்களைத் தூக்குற சக்தியா?" எனத் தமிழக வெற்றிக் கழகத்துக்கு மக்களே வருந்திப் பேசும் நிலை உருவாகிவிட்டது. முதல்வரே, உங்கள் செயல்பாடுகளை மக்கள் தொடர்ந்து பார்க்கிறார்கள். அடுத்து, பிளவுபட்ட அதிமுக உறுப்பினர்களுக்கு நீங்க என்ன 'ரிடர்ன் கிஃப்ட்' கொடுக்கப் போகிறீர்கள் என்பதையும் மக்கள் பார்க்கத்தான் போகிறார்கள்.

, திராவிட முன்னேற்றக்கழகம் தொடர்ந்து தன் கொள்கையில உறுதியாக இருந்து, ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சியாக செயல்படும்" என்று ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

## வரி விளம்பரங்கள்



தினத்தளம்

DHINATH DHALAM

| | | | |
|---|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் | |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் | |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் | |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | | |

தொடர்புக்கு : ☎ +919444082959

# தங்கம் விலை ஒரு கிராம் ரூ.15 ஆயிரத்தை கடந்து அதிர்ச்சி!



சென்னை: தங்கத்தின் மீதான சுங்க வரியை 6 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக உயர்த்தி உள்ளது மத்திய அரசு. இதனால், ஆபரணத் தங்கம் விலை கடுமையாக அதிகரித்து உள்ளது. நிலவரப்படி சென்னையில் 22 காரட் ஆபரணத்தங்கம் ஒரு கிராம் ரூ.15400-க்கு விற்பனையாகிறது. வெள்ளி விலையும் ஒரு கிராம் ரூ.300-ஐ கடந்து அதிர்ச்சியளித்துள்ளது.

பொதுவாகவே, சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் சூழல், மத்திய கி ழக்கில் நிலவும் போர் பதற்றம், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, தங்கத்தின் மீதான முதலீடு, உலக பங்குச் சந்தை முதலீடு உள்ளிட்டவற்றின் அடிப்படையில், தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது. இத்துடன், மத்திய அரசு தங்கத்தின் மீதான சுங்க வரியை 6 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக உயர்த்தி உள்ளதும் தங்கம் விலையில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அந்த வகையில், சென்னையில் 22 காரட் ஆபரணத் தங்கம் விலை இன்று அதிரடியாக உயர்ந்து உள்ளது. தங்கம் கிராமுக்கு ரூ.1070 உயர்ந்து ஒரு கிராம் ரூ.15,400-க்கும், பவுனுக்கு ரூ.8560 உயர்ந்து ஒரு பவுன் ரூ.1,23,200-க்கும் விற்பனையாகிறது.

வெள்ளி விலையும் கடும் உயர்வு: தங்கம் விலையைப் போல வெள்ளி விலையும் அதிரடியாக உயர்ந்துள்ளது. அதன்படி வெள்ளி விலை கிராமுக்கு ரூ.30 உயர்ந்து ஒரு கிராம் ரூ.330-க்கும், ஒரு கிலோகட்டி வெள்ளி ரூ.3,30,000-க்கும் விற்பனையாகிறது. இந்த திடீர் அதிரடி விலையேற்றம் நகை வாங்குவோர் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்



Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின், (TACTV) டிஜிட்டல் சிக்னல் விநியோகஸ்தர்கள் மற்றும் அசோசியேட்ஸ் அசோசியேஷன் சார்பாக அரசுக்கு பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்



கோவை காந்திபுரம் அடுத்த நியுசித்தாபுதூர் பகுதியில், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் (TACTV) டிஜிட்டல் சிக்னல் விநியோகஸ்தர்கள் மற்றும் அசோசியேட்ஸ் அசோசியேஷன் அதன் உறுப்பினர்கள் சார்பாக கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. சங்கத்தின் தலைவர் அசோகன், துணைச்செயலாளர் பாலாஜி,மாவட்டபொருளாளர் பிரபாகரன், மாநில ஆலோசகர் செல்வகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் தமிழக அரசின் புதிய முதல்வராக பதவியேற்ற விஜய்க்கு வாழ்த்துக்கள் தெரிவித்தனர். தொடர்ந்து பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன அதில், தமிழக முதல்வர் தனது தேர்தல் அறிக்கையில் கூறியுள்ள... கேபிள் டிவி ஆபரேட்டர்கள் மற்றும் தொழிலாளர்கள் நலனுக்கான திட்டங்களை முதல்வர் செயல்படுத்த வேண்டும், கேபிள் டிவி ஆபரேட்டர்கள் மற்றும் தொழிலாளர்கள் நலனை கருதி முதல்வர் கேபில் டிவி துறையில் ஏற்படுத்த உள்ள, புதிய மாற்றங்களுக்கு, டிஜிட்டல் சிக்னல் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் மற்றும் அசோசியேட்ஸ் அசோசியேஷன் மற்றும் அதன் உறுப்பினர்களின் ஆதரவையும், ஒத்துழைப்பையும் தருவதாகவும், தமிழக முதல்வர் அறிவிக்கும் திட்டங்களை உள்ளூர் கேபிள் டிவி நிறுவனத்தின்,டிஜிட்டல் சிக்னல் விநியோக ஸ்தர்கள் போர் வீரர்களாக செயல்பட்டு, அனைத்து நல திட்டங்களையும் TACTV சந்தாதாரர்களின் பார்வைக்கு கொண்டு செல்ல பாடுபடுவோம் எனவும், தமிழகத்தில் உள்ளஅனைத்துபொதுமக்களுக்கும் மிகக்குறைந்த கட்டணத்தில்நிறைந்தடிஜிட்டல் கேபிள் டிவி சேவைகளை வழங்கிட வேண்டும் என்பது போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# சுரண்டையில் மாநில அளவிலான கயிறு இழுக்கும் போட்டி நடந்தது

பங்களாச்சுரண்டை பேரன் புரூக் மேல் நிலைப்பள்ளியில் ஸ்கைக்ளப் மற்றும் தென்காசி மாவட்ட கயிறு இழுக்கும் சங்கம் சார்பில் தமிழ்நாடு மாநில அளவிலான கயிறு இழுக்கும் போட்டி நடைபெற்றது.

போட்டிகளுக்கு கயிறு இழுக்கும்சங்கதலைவர் பிளஸ்ஸி குமார் செயலாளர் பிரபாகரன் ஆகியோர் தலைமை வகித்தனர் . பள்ளி தாளாளர் லார்டுவின், கயிறு இழுக்கும் சங்கத்தின் மாநில பொது செயலாளர் பிச்சையப்பன் இணை செயலாளர் முனிரத்தினம் ஆகியோர்முன்னிலைவகித்தனர் செயலாளர் பெரியதுரை வரவேற்றார்

இதில் தமிழ்நாடு முழுவதும் இருந்து 55 அணிகள் பங்கேற்றன

போட்டிகளை தென்காசி தெற்கு மாவட்ட திமுக முன்னாள் செயலாளர் சிவபத்மநாதன் துவக்கி வைத்தார்

பின்னர் நடந்த பரிசளிப்பு விழாவில் முதல் பரிசு பெற்ற தென்காசி மாவட்ட கயிறு இழுக்கும் சங்கத்தின் ஸ்கை கிளப்அணிக்குசுரண்டை தொழிலதிபர் எஸ்வி கணேசன் சார்பில் திமுக மாவட்ட செயலாளர் ஜெயபாலன் பரிசுகள் வழங்கி பாராட்டினார். நிகழ்ச்சியில் ஆலங்குளம் யூனியன் சேர்மன் திவ்யா மணிகண்டன் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முக்முதா நகர திமுக செயலாளர் கணேசன்,ஒன்றியசெயலாளர்கள் சீனித்துரை, அன்பழகன், வீராணம் ஷேக் ரமேஷ் மாவட்ட மகளிரணி துணை அமைப்பாளர் சுசிலா தீயணைப்பு துறை சிறப்பு அலுவலர் ரவீந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பனிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் சிறப்பான தேர்ச்சி மற்றும் உயர்ந்த மதிப்பெண்கள் பெற்று புதிய சாதனையை பதிவு செய்துள்ள கோவை மதுக்கரை மல்லையன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி



கோவை மாவட்டம் மதுக்கரைஅருகேசெயல்பட்டு வரும் மல்லையன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, பனிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் சிறப்பான தேர்ச்சி மற்றும் உயர்ந்த மதிப்பெண்கள் பெற்று கல்வித்துறையில் புதிய சாதனையை பதிவு செய்துள்ளது.

இப்பள்ளியை சேர்ந்த மாணவி ஸ்னேகா, 600க்கு 597 மதிப்பெண்கள் பெற்று கோவைக்கு உட்பட்ட பொள்ளாச்சி கல்வி மாவட்டத்தில் முதலிடத்தையும், மாநில அளவில் இரண்டாம் இடத்தையும் பிடித்து பள்ளிக்கும், பெற்றோருக்கும் பெருமை சேர்த்துள்ளார். அவரது இந்த அபார சாதனை பள்ளி வளாகத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. மேலும், இதே பள்ளியில் பயின்ற மாணவி வித்யா ஸ்ரீ 595 மதிப்பெண்களும், மாணவி நேஹா 581 மதிப்பெண்களும் பெற்று கவனம் ஈர்த்துள்ளனர்.. இந்த சாதனையை கொண்டாடும் வகையில் பள்ளி நிர்வாகம் சார்பில் பாராட்டு விழா நடைபெற்றது. ஸ்ரீ பி.மல்லையன் மெட்ரிக் பள்ளியின் தாளாளரும்,தலைவருமான சண்முகம் தலைமையில் நடைபெற்ற விழாவில், சாதனை மாணவிகள் மேடைக்கு வருகை தந்தபோது, பள்ளி ஆசிரியைகள் அனைவரும் எழுந்து நின்று கரகோஷம் எழுப்பி கைகளை தட்டி மாணவிகளை உற்சாகமாக வரவேற்றனர்.

எல்.கே.ஜி.முதல் இதே பள்ளியில் பயின்ற மாணவிகள் மூன்று பேரும் உயர்ந்த மதிப்பெண்கள் பெற்றுள்ளது, பள்ளியின் தரமான கல்வி முறையை வெளிப்படுத்துவதாக பெற்றோர்கள் மற்றும் ஆசிரியைகள் பாராட்டினர்.

பள்ளியின் செயலாளர் சரவணன், பொருளாளர் ஜெயக்குமார், நிர்வாக அறங்காவலர்கள் ருக்மணி துரைசாமி, மனோன்மணி சண்முகம், சந்தோஷ் மல்லையன் உள்ளிட்டோர் மாணவிகளை பாராட்டினர்.. நிகழ்ச்சியில்பேசியபள்ளி முதல்வர் ரேகா மணிகண்டன், "மாணவர்களின் வெற்றிக்கு ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் மாணவர்களின்கடினஉழைப்பே காரணம். எதிர்காலத்திலும் பள்ளி மாணவர்கள் மாநில மற்றும் தேசிய அளவில் சாதனை படைப்பார்கள் என்ற நம்பிக்கை உள்ளது" என தெரிவித்தார்.. இந்த பாராட்டு விழா பள்ளி வளாகத்தில் உற்சாகமான சூழலை உருவாக்கியதுடன்,பிற மாணவர்களுக்கும் ஊக்கமளிக்கும் நிகழ்வாக அமைந்தது.



பெண்ணாடம் அரிமா சங்கம் சார்பாக, மாவட்ட தலைவரும்(உடல் தானம்) மாவட்ட அவைப் பொருளாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளவருமான சக்திவேல் கவிதா தம்பதியினரின் திருமண நாளை முன்னிட்டு, இருங்களாகுறிச்சி கிராமத்தில் உள்ள நீலாபுரம் ஏரியை தூர்வாரும் பணிக்கான நிதி உதவி நேற்று வழங்கப்பட்டது. கொடையாளர் சக்திவேல் இந்த நிதியுதவியை வழங்கினார். பெண்ணாடம் அரிமா சங்கத் தலைவர் வசந்த ராஜ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சங்கச் செயலாளர் அழகு வேலன், மாவட்டத் தலைவர்கள் அருள்முருகன், கிருஷ்ணமூர்த்தி, தலைவர் (தேர்வு) லயன் பாண்டியன், பொருளாளர் (தேர்வு) லயன் கணேஷ் மற்றும் லயன் வினோத்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.



உளுந்தூர்பேட்டை ஸ்ரீ சாரதா ஆசிரமம் சார்பில், கோடை வெயிலைத் தணிக்க மணிக்கூண்டு, அரசு மருத்துவமனை, VAO அலுவலகம், நாராயணன் தியேட்டர் மற்றும் விருத்தாசலம் ரோடு IOB ஆகிய 5 இடங்களில் நீர் மோர் பந்தல்கள் அமைக்கப்பட்டன. இதனை நகராட்சித் தலைவர் திருநாவுக்கரசு திறந்து வைத்தார். இந்நிகழ்வில் நகராட்சி துணைத் தலைவர்வைத்தியநாதன்,ஆசிரமநிர்வாகியத்திஸ்வரிஆத்மவிகாசப்ரியாஅம்பாமற்றும்மாவட்டதிட்டக்குழுஉறுப்பினர் டேனியல் ராஜ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்

# தேனி மாவட்ட இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி, தேனி என்.ஆர்.டி.நர்சிங் கல்லூரி மற்றும் தேனி அரசு தலைமை மருத்துவமனை இணைந்து நடத்திய மாபெரும் ரத்ததான முகாம்



என்.ஆர்.டி. நர்சிங் கல்லூரியின் தாளாளர் மற்றும் இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி சேர்மன் திரு.என்.ஆர்.டி.ஆர். தியாகராஜன் அவர்கள் இரத்ததான முகாமைத் துவக்கி வைத்தார். ரெட் கிராஸ் துணை சேர்மன் திரு.வி. மகாராஜன், செயலாளர் திரு. க.சுருளிவேல், உறுப்பினர்கள் காமராஜ், சரவணகுமார், என்.ஆர்.டி. நர்சிங் கல்லூரியின் முதன்மை செயல் அதிகாரி ஹேமா, கல்லூரி முதல்வர் திரு. விஜய் மற்றும் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இரத்த வங்கியின் மருத்துவ அலுவலர் மருத்துவர்பிரியாஅவர்கள் தலைமையிலான மருத்துவ குழுவினர் இரத்த சேகரிப்பில் ஈடுபட்டனர். 50க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் இரத்த தானம் செய்தனர். இரத்த தானம் செய்த அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டன.

# 5 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில் குற்றவாளிக்கு 30 வருடம் சிறை தண்டனை மற்றும் ரூ.13,000 அபராதம்



கன்னியாகுமரி மாவட்டத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றவழக்குகளில்விரைவில் விசாரணை முடித்து குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்வதையும் அவ்வழக்குகளில் நீதிமன்ற விசாரணையை கண்காணித்தல், பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு அளித்தல் ஆகிய செயல்பாடுகள் மூலம் குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத்தருவதை உறுதி செய்ய வேண்டும் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்நிலையில் கடந்த 2020 ஆம் ஆண்டு மருதங்கோடு, மடத்துவிளை வீடு பகுதியை சார்ந்த தங்கராஜ் என்பவரின் மகன் ரெஜி(46) என்ற குற்றவாளி 5 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்ததற்காக மார்த்தாண்டம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் குற்ற எண் 16/2020 U/S 449ipc &5(i),5(M),6 POCSO Act.இன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை செய்து குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு விசாரணை நாகர்கோவில் போக்சோ நீதிமன்றத்தில் நடந்து வந்தது இந்நிலையில் நீதிபதி இக்குற்றத்தில் ஈடுபட்ட குற்றவாளிக்கு 30 வருடம் சிறை தண்டனை மற்றும் 13,000 ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பு அளித்தார்கள்.

நீதிமன்ற வழக்கு விசாரணை மற்றும் சாட்சிகள் விசாரணை ஆகியவற்றில் சிறப்பாக செயல்பட்டு குற்றவாளிகளுக்கு தண்டனை வாங்கித் தர காரணமாக இருந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரிகள், அரசு வழக்கறிஞர், நீதிமன்ற காவலர் இந்த வழக்கின் நீதிமன்ற விசாரணை முறையாக கண்காணித்த மார்த்தாண்டம் உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர், மார்த்தாண்டம் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் ஆகியோரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் வெகுவாக பாராட்டினார்கள். 5 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில் குற்றவாளிக்கு 30 வருடம் சிறை தண்டனை மற்றும் 13,000 ரூபாய் அபராதம்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றவழக்குகளில்விரைவில் விசாரணை முடித்து குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்வதையும் அவ்வழக்குகளில் நீதிமன்ற விசாரணையை கண்காணித்தல், பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு அளித்தல் ஆகிய செயல்பாடுகள் மூலம் குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத்தருவதை உறுதி செய்ய வேண்டும் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்நிலையில் கடந்த 2020 ஆம் ஆண்டு மருதங்கோடு, மடத்துவிளை வீடு பகுதியை சார்ந்த தங்கராஜ் என்பவரின் மகன் ரெஜி(46) என்ற குற்றவாளி 5 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்ததற்காக மார்த்தாண்டம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் குற்ற எண் 16/2020 U/S 449ipc &5(i),5(M),6 POCSO Act.இன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை செய்து குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு விசாரணை நாகர்கோவில் போக்சோ நீதிமன்றத்தில் நடந்து வந்தது இந்நிலையில் நீதிபதி இக்குற்றத்தில் ஈடுபட்ட குற்றவாளிக்கு 30 வருடம் சிறை தண்டனை மற்றும் 13,000 ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பு அளித்தார்கள்.

நீதிமன்ற வழக்கு விசாரணை மற்றும் சாட்சிகள் விசாரணை ஆகியவற்றில் சிறப்பாக செயல்பட்டு குற்றவாளிகளுக்கு தண்டனை வாங்கித் தர காரணமாக இருந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரிகள், அரசு வழக்கறிஞர், நீதிமன்ற காவலர் இந்த வழக்கின் நீதிமன்ற விசாரணை முறையாக கண்காணித்த மார்த்தாண்டம் உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர், மார்த்தாண்டம் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் ஆகியோரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் வெகுவாக பாராட்டினார்கள்.

# தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின், (TACTV) டிஜிட்டல் சிக்னல் விநியோகஸ்தர்கள் மற்றும் அசோசியேட்ஸ் அசோசியேஷன் சார்பாக அரசுக்கு பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.



கோவையில் நடைபெற்ற தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் (TACTV) டிஜிட்டல் சிக்னல் விநியோகஸ்தர்கள் மற்றும் அசோசியேட்ஸ் அசோசியேஷன் அதன் உறுப்பினர்கள் சார்பாக கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் சங்கத்தின் தலைவர் அசோகன், மாநில பொது செயலாளர் வி. பாலாஜி, மாநில பொருளாளர் பிரபாகரன், மாநில ஆலோசகர் V.செல்வகுமார் ஆகியோர் மற்றும் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்ட நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில், தமிழக அரசின் புதிய முதல்வராக பதவியேற்ற விஜய்க்கு வாழ்த்துக்கள் தெரிவித்தனர். தொடர்ந்து பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன அதில், தமிழக முதல்வர் தனது தேர்தல் அறிக்கையில் கேபிள் டிவி துறைக்கு எவ்வித திட்டங்களும் கூறவில்லை... இனிவரும் காலங்களில் கேபிள் டிவி ஆபரேட்டர்கள் மற்றும் தொழிலாளர்கள் நலனுக்கான பல நல்ல திட்டங்களை திட்டங்களை முதல்வர் செயல்படுத்த வேண்டும், கேபிள் டிவி ஆபரேட்டர்கள் மற்றும் தொழிலாளர்கள் நலனை கருதி முதல்வர் கேபில் டிவி துறையில் ஏற்படுத்த உள்ள, புதிய மாற்றங்களுக்கு,டிஜிட்டல் சிக்னல் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் மற்றும் அசோசியேட்ஸ் அசோசியேஷன் மற்றும் அதன் உறுப்பினர்களின் ஆதரவையும், ஒத்துழைப்பையும் தருவதாகவும்,தமிழக முதல்வர் அறிவிக்கும் திட்டங்களை TACTV டிஸ்ட்ரிக் அட்மினிஸ்ட்ரேட்டர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள் போர் வீரர்களாக செயல்பட்டு, அனைத்து நல திட்டங்களையும் பொதுமக்களின் இல்ல தொலைக்காட்சி திரைகளுக்கு தமிழகத்தில் உள்ள கேபிள் டிவி ஆபரேட்டர்கள் மூலம் கொண்டுசெல்லமுனைப்புடன்பாடுபடுவோம்எனவும், தமிழகத்தில் உள்ள அனைத்து பொதுமக்களுக்கும் மிகக்குறைந்த கட்டணத்தில் நிறைந்த டிஜிட்டல் கேபிள் டிவி சேவைகளை வழங்கிட மேலும் கேபிள் டிவி ஆப்பரேட்டர்களுக்கு தமிழ்நாடு பைபர் நெட் நிறுவனம் மூலம் அதிவேக இணைய இணைப்பு, ஓ டி டி, ஐ பி டிவி ஆண்ட்ராய்டு செட் டாப் பாக்ஸ் கொண்ட இணைப்பை வழங்க வேண்டும் என்பது போன்றபல்வேறுகோரிக்கைகளை முன்வைத்து உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழகம் முழுவதும் பள்ளி, கோவில் அருகே உள்ள 717 மதுக்கடைகள் மூடல் உளுந்தூர்பேட்டையில் த.வெ.க.வினர் பட்டாசு வெடித்து கொண்டாட்டம்




தமிழகம் முழுவதும் பள்ளிகள், வழிபாட்டுத்தலங்கள் மற்றும் பேருந்து நிலையங்கள் அருகே செயல்பட்டு வந்த 717 அரசு மதுக்கடைகளை மூட அரசு உத்தரவிட்டுள்ளது. இதை வரவேற்று உளுந்தூர்பேட்டையில் தமிழக வெற்றிக் கழகத்தினர் பட்டாசு வெடித்தும், இனிப்புகள் வழங்கியும் தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்

மாணவர்களின் கல்விச் சூழல் மற்றும் பக்தர்களின் மனநிலை பாதிக்கப்படுவதாக பொதுமக்கள் நீண்ட காலமாக எழுப்பி வந்த கோரிக்கையை ஏற்று, பள்ளி,கல்லூரி,கோவில் பகுதிகளில் இருந்து குறிப்பிட்ட தூரத்திற்குள் உள்ள மதுக்கடைகளை அகற்றவும், புதிய உரிமங்கள் வழங்காமல் இருக்கவும் அரசு உத்தரவிட்டுள்ளது. இதன்படி மாநிலம் முழுவதும் 719 அரசு மதுக்கடைகள் மூடப்பட்டுள்ளன.

உளுந்தூர்பேட்டை பேருந்து நிலையம் அருகே, பள்ளி மாணவர்கள் செல்லும் வழியில் இயங்கி வந்த மதுக்கடை மூடப்பட்டதை அடுத்து, அந்த கடை முன்பு தமிழக வெற்றிக் கழகத்தினர் திரண்டனர். அங்கு பட்டாசுகள் வெடித்தும், பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் தங்களது மகிழ்ச்சியை கொண்டாடினர். "பள்ளி, கோவில் அருகே மதுக்கடைகள் இருப்பது சமூகத்திற்கு தீங்கு விளைவிப்பதாக இருந்தது. அவற்றை மூடிய அரசின் முடிவு வரவேற்கத்தக்கது. இது மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் நலனை பாதுகாக்கும் நடவடிக்கை" என த.வெ.க. நிர்வாகிகள் தெரிவித்தனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (13.05.2026) ஈரோடு மாவட்டம், பவானி, தொட்டி பாளையத்தில் உள்ள நாற்றுப்பண்ணையினை ஆய்வு மேற்கொண்டார்.

# தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள தனியார் பள்ளி வாகனங்களில் மாணவர்களுக்கான பாதுகாப்பு வசதிகள் சரியாக உள்ளனவா என்பது குறித்து மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சி. மதன், ஆகியோர் ஆய்வு செய்தனர்




தமிழகத்தில் கோடை விடுமுறை முடிந்து பள்ளிகள் திறக்கப்பட உள்ள நிலையில்,பள்ளி மாணவர்களின் பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்யும் வகையில் ஆண்டுதோறும் பள்ளி வாகனங்கள் ஆய்வு செய்யப்படுவது வழக்கம். அதன்படி, தூத்துக்குடி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு உட்பட்ட பள்ளி வாகனங்களுக்கான ஆய்வுக் கூட்டம் இன்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலக மைதானத்தில் நடைபெற்றது.

ஆட்சியர் மற்றும் எஸ்.பி. தலைமையிலான அதிகாரிகள் ஒவ்வொரு வாகனமாகச் சென்று, அவசரக் கால கதவுகள் (Emergency Exit) சரியாகச் செயல்படுகின்றனவா? முதலுதவிப் பெட்டிகள் மற்றும் தீயணைப்புக் கருவிகள் தயார் நிலையில் உள்ளனவா? வாகனத்தின் தளம் (Floor-board) மற்றும் படிக்கட்டுகள் உறுதியாக உள்ளனவா?

வாகனங்களில் வேகக் கட்டுப்பாட்டு கருவிகள் மற்றும் கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளனவா? ஓட்டுநர்களின் உரிமம் மற்றும் வாகனப் பராமரிப்பு ஆவணங்கள் சரியாக உள்ளனவா? போன்ற வசதிகளைச் சரிபார்த்தனர். இந்த ஆய்வின் போது வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள், மோட்டார் வாகன ஆய்வாளர்கள் மற்றும் போக்குவரத்துத் துறை ஊழியர்கள் உடனிருந்தனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (13.05.2026) ஈரோடு மாவட்டம், பவானி, மைலம்பாடி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவ பயனாளிகளுக்கு அளிக்கப்பட்டுவரும் சிகிச்சை முறை குறித்து ஆய்வு மேற்கொண்டார்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (13.05.2026) ஈரோடு மாவட்டம், பவானி நகராட்சி, தேவபுரத்தில் செயல்பட்டு வரும் நுண் உரமாக்கும் மையத்தில் ஆய்வு மேற்கொண்டார்.



உலக செவிலியர் தினத்தை முன்னிட்டு,ஈரோடு மாவட்ட தலைமை அரசு மருத்துவமனை வளாகத்தில் செவிலியர் தின விழா நடைபெற்றது. மருத்துவமனை கண்காணிப்பாளர் டாக்டர் வெங்கடேஷ் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்வில், டாக்டர் சசிரேகா உள்ளிட்ட மருத்துவ பணியாளர்கள் கலந்துகொண்டனர்.இவ்விழாவின் ஒரு பகுதியாக, செவிலியர்களின்சேவையைஅங்கீகரிக்கும்வகையில்அனைவரும்செவிலியர்தினஉறுதிமொழியைஏற்றுக்கொண்டனர்.



ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் நேற்று (13.05.2026) நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்ப்புகூட்டத்தில்பொதுமக்களிடம்இருந்துமாவட்டகாவல்கண்காணிப்பாளர்கிரண்ஸ்ருதிபொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற்று மனு மீது விசாரணையை விரைந்து முடிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (13.05.2026) ஈரோடு மாவட்டம், பவானி ஊராட்சி ஒன்றியம், மைலம்பாடி ஊராட்சியில் ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டம் 2026 27 ன் கீழ் கண்ணடிபாளையம் மைலம்பாடி குப்பிச்சிபாளையம் வரை ஒரு வழித்தடத்தை இடை வழித்தடமாக அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல், பெட்டி பாலம் திரும்பக் கட்டுதல், மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் தடுப்பு சுவர் கட்டும் பணிகளை ஆய்வு மேற்கொண்டார்.

# தமிழக உளவுத் துறை ஐ.ஜி.யாக அஸ்ரா கார்க் நியமனம்

சென்னை:

தமிழகத்தின் உளவுத் துறை ஐ.ஜி.யாக அஸ்ரா கார்க் நியமி க்கப்பட்டுள்ளார்.

வடக்கு மண்டல ஐ.ஜியாக உள்ள அஸ்ரா கார்க், தமிழக காவல் துறையின் உளவுத் துறை ஐ.ஜி.யாக நியமிக்க ப்பட்டுள்ளார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலின்போது உளவுத் துறை ஐ.ஜி.யாக இருந்த செந்தில்வேலன் மாற்றப்பட்டு, அவினாஷ் குமாரை நியமித்து தேர்தல் ஆணையம் உத்தரவிட்டது. இந்தச் சூழலில், தற்போது அஸ்ரா கார்க் உளவுத் துறை ஐ.ஜி.யாக நியமிக்கப்பட்டுள்ளார்.



தவெக தலைவர் விஜய் கலந்துகொண்ட கரூர் கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்த சம்பவத்தில், அந்த வழக்கை விசாரிக்க அப்போதைய திமுக அரசு அஸ்ரா கார்க்கை நியமித்தது நினைவு கூரத்தக்கது.

# மாதாந்திர குற்ற கலந்தாய்வுக் கூட்டம் மாவட்ட ஆயுதப்படையில் வைத்து நடைபெற்றது



பெண்கள் குழந்தைகள் சம்பந்தமான குற்றங்களில் உடனடியாக வழக்கு பதிவு செய்து விசாரணை செய்ய வேண்டும் போதைப் பொருட்களுக்கு எதிரான கடுமையான நடவடிக்கை வாகன திருட்டு நடைபெறும் இடங்களை கண்டறிந்து தடுப்பது ஊர் காவல்காரன் கண்காணிப்பு திட்டத்தின் கீழ் சிசிடிவி கேமரா நிறுவுதல் 173(2) திட்டத்தின் படி புகார்தாரர்களுக்கு உடனடியாக இலவசமாக FIR நகல் வழங்குதல் என பல்வேறு அறிவுறுத்தல்களை வழங்கினார்

ஏப்ரல் மாதத்தில், விரைவான குற்றப்பத்திரிகை தாக்கல், குற்றவாளிகளை கைது செய்தல், சரித்திர பதிவேடு குற்றவாளி களின் மீதான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தருதல் என ஒட்டுமொத்தமாக சிறப்பாக செயல்பட்ட காவல் நிலையமாக மார்த்தாண்டம் காவல் நிலையம் தேர்வு செய்யப்பட்டு மாவட்ட காவல் கண்காணிப்பாளர்ஸ்டாலின் கேடயம் வழங்கினார். அதனை மார்த்தாண்டம் உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர்.நல்லசிவம் மற்றும் மார்த்தாண்டம் காவல் நிலைய உதவி ஆய்வாளர்.சதீஷ் , ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.



ஈரோடு மாவட்டம் பெருந்துறை சட்டமன்றத் தொகுதியின் அதிமுக வேட்பாளர் ஜெயக்குமார் நேற்று தமிழக முதலமைச்சர் விஜய்க்கு பூங்கொத்து கொடுத்து வாழ்த்து தெரிவித்தார். அதிமுக எம்எல்ஏ எஸ்.பி வேலுமணி தலைமையிலான அணிக்கு நேரில் சென்று வாழ்த்து தெரிவித்த போது ஜெயக்குமார் தனது ஆதரவையும் தெரிவித்துக் கொண்டார். இந்த நிகழ்ச்சியின் போது எஸ் பி வேலுமணி மற்றும் சி.வி.சண்முகம் மற்றும் பலர் உடன் இருந்தனர்.

# ஜோதிடர் ராதன் பண்டிட் நியமனம் ரத்து: இடதுசாரிகள், காங்கிரஸ், தேமுதிக வரவேற்பு



சென்னை: முதல்வர் விஜய்யின் ஜோதிடர் ராதன் பண்டிட் வெற்றிவேல் முதல்வரின் அரசியல் பிரிவு சிறப்பு அதிகாரியாக நியமனம் செய்யப்பட்ட உத்தரவு ரத்து செய்யப்பட்டதை இடதுசாரிகள், காங்கிரஸ், தேமுதிக கட்சிகள் வரவேற்றுள்ளன.

முதல்வர் விஜய்யின் ஜோதிடர் ராதன் பண்டிட் வெற்றிவே ல் முதல்வரின் அர சியல் பிரிவு சிறப்பு அதிகாரியாக நேற்று நியமனம் செய ப்பட்டார். முதல்வர் வி ஜய்யின் ஜோதிடர் ரா த ன் பண்டிட் சிறப்பு அ திகாரியாக நியமிக்கப்பட்டதற்கு திமுக, காங்கிரஸ், விசிக, சிபிஎம், சிபிஐ உள்ளிட்ட கட்சிகள் கண்டனம் தெரிவித்தன.

மேலும், சட்டப்பேரவையில் பேசிய தேமுதிக எம்எல்ஏ பிரேமலதா, ஜோதிடர் ராதன் பண்டிட் நியமனத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தார். ஜோதிடர் ராதன் பண்டிட் நியமனத்துக்கு எதிர்ப்பு வலுத்த நிலையில், தவெக அரசு இன்று அந்த உத்தரவை ரத்து செய்தது. இதற்கு பல்வேறு அரசியல் கட்சிகளும் வரவேற்பு தெரிவித்துள்ளன.

இது குறித்து மார்க்சிஸ்ட் மாநில செயலாளர் பெ.சண்முகம் வெளியிட்ட அறிக்கையில், 'மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட அரசியல் கட்சிகள் மற்றும் பல்வேறு அமைப்புகளின் எதிர்ப்பைத் தொடர்ந்தும், தவறை உணர்ந்தும் ஜோதிடர் ரிக்கி ராதன் பண்டிட் பணி நியமனத்தை அரசு திரும்பப் பெற்றுள்ளது. விமர்சனங்கள், குறைகள் சுட்டிக்காட்டப்படும்போது அதை ஏற்றுச் சரிசெய்து கொள்வது என்ற அணுகுமுறை தொடர வேண்டும். அரசின் இந்த முடிவை வரவேற்கிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா வெளியிட்ட அறிக்கையில், 'ராதன் பண்டிட்டை அரசு பணியில் நியமித்ததை ரத்து செய்த தமிழக முதல்வர் விஜய்க்கு வாழ்த்துக்கள். ஜோதிடர் ராதன் பண்டிட் என்பவரை அரசு பணியில் நியமித்ததை கண்டித்து, இன்று (13.05.2026) சட்டப்பேரவையில் நான் எடுத்துரைத்த கருத்துக்கு உடனடியாக நியமன ஆணையை ரத்து செய்த தமிழக முதல்வர் விஜய்க்கும், தமிழக அரசின் நடவடிக்கைக்கும் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கிறோம்' எனத் தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் எம்.பி ஜோதிமணி வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'அரசியல் கட்சிகள் மற்றும் பொதுமக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து ஜோதிடர் ரிக்கி ராதன் பண்டிட் வெற்றிவேல் நியமனத்தை மாண்புமிகு முதல்வர் ஜோசப் விஜய் ரத்து செய்துள்ளதை வரவேற்கிறேன். வரும் காலங்களில் மாணவர்கள், இளைஞர்கள் உள்ளிட்ட எதிர்காலத் தலைமுறைக்கு எடுத்துக்காட்டாக முதல்வர் மற்றும் தமிழ்நாடு அரசின் செயல்பாடுகள் அமையும் என்று நம்புகிறேன்.

போகவேண்டிய தூரம் நிறைய உள்ளது. ஒவ்வொரு அடியும் கவனத்துடன் எடுத்து வைக்கப்பட வேண்டும். எதிர்க்கருத்துக்களுக்கு மதிப்பளிக்கும் முதல்வரின் பண்பு உண்மையிலேயே பாராட்டுக்குரியது' எனத் தெரிவித்துள்ளார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் மு.வீரபா ண்டியன் வெளியிட்ட அறிக்கையில், 'தமிழ்நாடு அரசின் முதல்வர் ஜோசப் விஜய்க்கு சிறப்பு அரசியல் அலுவலராக ரிக்கி ராதன் பண்டிட் வெற்றிவேல் நியமிக்கப்பட்டார். ஜோதிட சாஸ்திரத்தை தொழிலாக கொண்ட ஒருவரை அரசின் அதிகார மையத்தில் அரசியல் சிறப்பு அலுவலராக நியமிக்கப்பட்டது அரசியலமைப்பு சட்டத்தின் மதச்சார்பற்ற பண்புக்கு மாறானது.

அறிவியல் கருத்துக்களையும், கண்ணோட்டத்தையும் வளர்க்க வேண்டும் எனில் அவரது பணி நியமனம் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என பல தரப்பில் இருந்தும் விமர்சனங்கள் எழுந்தன. இவற்றைக் கருத்தில் கொண்ட தமிழ்நாடு அரசு, ரிக்கிரதன் பண்டிட் வெற்றிவேல் நியமனத்தை திரும்பப் பெற்றுக் கொண்டது. விமர்சனங்களுக்கு காது கொடுத்து, உரிய நடவடிக்கை எடுத்துள்ள அரசின் ஜனநாயக பண்புக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு நன்றி பாராட்டுதல்களை தெரிவிப்பதுடன், இந்த ஆரோக்கியமான அணுகுமுறை தொடர்ந்திட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறது' எனத் தெரிவித்துள்ளார்



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (13.05.2026) ஈரோடு மாவட்டம், பவானி, மைலம்பாடியில் உள்ள ஊர்ப்புற நூலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகளை ஆய்வு மேற்கொண்டார்.



தூத்துக்குடி மாவட்ட காவல்துறை சார்பில் பொதுமக்கள் குறைதீர்க்கும் மனு கூட்டம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சி. மதன் தலைமையில் நடைபெற்றது. தமிழ்நாடு காவல்துறைதலைமைஇயக்குநர்உத்தரவின்படிஒவ்வொருவாரமும்புதன்கிழமைதோறும் பொதுமக்கள் குறைதீர்க்கும் கூட்டம் தூத்துக்குடி மாவட்ட காவல்துறை அலுவலகத்தில் நடைபெற்றுவருகிறது.அதன்படிஇன்றுமாவட்டகாவல்அலுவலகத்திற்குமனுகொடுக்க வந்த 42 மனுதாரர்கள் தங்கள் குறைகளை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் நேரடியாக தெரிவித்து புகார் மனு அளித்தனர். பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சி. மதன் உடனடியாக விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

# "திமுகவுடன் அதிமுக பேச்சு நடத்தவே இல்லை" எடப்பாடி பழனிசாமி திட்டவட்டம்



"எங்களுடைய கூட்டணியை தவிர்த்து வேறு யாரிடமும் அதிமுக பேச்சுவார்த்தை நடத்தவில்லை. நூற்றுக்கு நூறு சதவீதம் திமுகவுடன் நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தவில்லை" என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவை வளாகத்தில் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி இன்று செய்தியாளர்களிடம் கூறியது: "அதிமுக சட்டப்பேரவை உறுப்பினர்கள், தவெக அரசை எதிர்த்து வாக்களிக்க வேண்டும் என தீர்மானித்து இருந்தோம். சட்டப்பேரவை கட்சி தலைவர் தேர்வை முறையாக சபாநாயகருக்கு தெரிவித்தோம். கொறடா உத்தரவை மீறி சட்டத்துக்குப் புறம்பாக தவெக அரசுக்கு வாக்களித்துள்ளனர். ஜெயலலிதா புகழ் சொல்லி தான் இரட்டை இலை சின்னத்தில் வெற்றி பெற்றோம். அதிமுகவுக்கு விசுவாசமாக இல்லாமல் துரோகம் விளைவிக்கிறார்கள் சில முன்னாள் அமைச்சர்கள்.

தேர்தலில் வெற்றி தோல்வி ஏற்படுவது இயல்பான ஒன்றுதான். இது அதிமுகவுக்கு மட்டும் நடந்தது இல்லை. சில முன்னாள் அமைச்சர்கள் திட்டமிட்டு அமைச்சர் ஆக வேண்டும் என்ற ஆசையில் தவறாக வழிநடத்துகிறார்கள்.

தூய்மையான ஆட்சி நடத்துவேன் என்று சொல்லும் முதல்வர் விஜய், ஒரு கட்சியில் கருத்து வேறுபாடும் நிலவும்போது ஒரு தரப்பினரை சந்திப்பது எந்த விதத்தில் நியாயம்? இது தான் தூய்மையா? எல்லா இயக்கங்களுக்கும் சோதனை வரும், பிரிவு வரும். ஆனால், எந்த தலைவரும் பிரிந்தவர்களின் இல்லங்களுக்கு சென்றது இல்லை. ஆரம்பத்திலேயே தவறான பாதைக்கு செல்கிறார் தவெக விஜய். இது போன்ற விஷயங்கள் வருத்தமளிக்கிறது. அதிமுக வலிமையான இயக்கம். அதிகமான தொண்டர்களை கொண்ட இயக்கம். எனது பிரச்சார ங்களில் யாரை தாக்கிப் பேசி இருந்தோம் என நீங்களே பார்த்தீர்கள். அதிமுக தோன்றியதே எதிர்ப்பில் தான். அப்படி இருக்கும்போது நாங்கள் எப்படி இப்படி செய்வோம்; வேறு எந்த விஷயத்தையும் அவர்களால் பேச முடியவில்லை. இதுபோன்ற காரணத்தை சொல்லி மக்கள், நிர்வாகிளி டத்தில் ஒரு தவறான விஷயத்தை சொல்லி வருகிறார்கள். அதோடு தமிழக வெற்றிக் கழக அமைச்சரவையில் இடம்பெற வேண்டும் என்ற ஆசையில் இப்படி சொல்கிறார்கள். அதிமுக, எங்களுடைய கூட்டணியை தவிர்த்து வேறு யாரிடமும் பேச்சுவார்த்தை நடத்தவில்லை. நூற்றுக்கு நூறு சதவீதம் திமுகவுடன் நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தவில்லை" என்று பழனிசாமி தெரிவித்தார்.

# Russia's Sarmat missile: All about nuclearcapable ballistic missile, dubbed as world's 'most powerful'

*Russian President Vladimir Putin announced on Tuesday that Moscow would deploy its nuclear-capable Sarmat intercontinental ballistic missile by the end of the year.*

*The announcement, made during a televised meeting with top military officials, marked Russia's latest attempt to showcase its next-generation strategic weapons programme amid ongoing tensions with the West, according to a Bloomberg report.*



*"This is the most powerful missile in the world," Putin said in his address. He added that the combined power of the Sarmat's individually targeted warheads is more than four times higher than of any of its Western counterparts, according to a report by The Associated Press.*

*The military conducted a successful test of the weapon, the commander of Russia's Strategic Missile Forces, Sergey Karakayev, told Putin during the meeting.*

*Karakayev said the first regiment equipped with the missile would be placed on combat duty by the end of the year in Russia's Krasnoyarsk region.*

*"It's the most powerful missile system in the world," Putin said during the meeting. "The total yield of the delivered warhead is more than four times greater than that of any existing, even the most powerful, Western equivalent."*

*The Russian leader's remarks came shortly after a three-day ceasefire between Russia and Ukraine ended.*

*The truce, announced by US President Donald Trump, had enabled Russia to hold its World War II Victory Day celebrations without disruption. On Tuesday, both Russia and Ukraine resumed attacks against each other.*

*Repeated delays, setbacks for Russia's Sarmat in past years*

*Despite Moscow's latest declaration, Russia's Sarmat missile programme has faced repeated delays and setbacks in recent years. The missile was originally expected to enter service by the end of 2022, according to Russia's state-run RIA Novosti news agency.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.